செய்தி வெளியீடு எண்: 83 நாள்: 31.01.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.1.2013 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் 15 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை அடையாற்றின் மீது திரு.வி.க.பாலத்துக்கு அருகில் கட்டப்பட்டுள்ள மூன்று வழித்தடப் பாலத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், தமிழகம் முழுவதும் 89 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 14 புதிய பாலங்களையும், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உப்புதுறைப்பாளையம் முதல் மதுக்கம்பாளையம் பிரிவு வரை உள்ள தாராபுரம் புறவழிச்சாலையினையும், 1 கோடியே 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலைக் கட்டமைப்பு வசதி மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. சாலைக் கட்டமைப்பு வசதியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மாநிலம் முழுவதிலும் தேவைக்கேற்ப புதிய பாலங்களைக் கட்டுவதிலும், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரிப்பதிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன் அடிப்படையில் போக்குவரத்து மேம்பாட்டிற்காக சென்னை, அடையாற்றின் மீது திரு.வி.க.பாலத்துக்கு அருகில் 15 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மூன்று வழித்தடப் பாலம்; காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் 22 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரயில்வே கடவு எண். 69–க்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள ரயில்வே மேம்பாலம்; வேலூர் மாவட்டம், வாழைப்பந்தலில் 5 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருவண்ணாமலை மாவட்டம், நாராயணகுப்பத்தில் 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; விழுப்புரம் மாவட்டம், திருவக்கரையில் 9 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்; திருச்சி மாவட்டம், கொத்தம்பட்டியில் 1 கோடியே

96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் வெண்ணாற்றின் குறுக்கே 5 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மணத்திடல் – வளப்பக்குடியில், குடமுருட்டி ஆற்றின் குறுக்கே 4 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலங்கள்; திருப்பூர் மாவட்டம், முத்தூரில் நாசுவன்கரைஓடையின் குறுக்கே 2 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம் மற்றும் பெரமியம் செல்லப்பிள்ளை கவுண்டம்புதூரில் அமராவதி ஆற்றின் குறுக்கே 5 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; கரூர் மாவட்டம், அண்ணாநகர் – வேளம்பூண்டியில் அமராவதி ஆற்றின் குறுக்கே 2 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தாம்போகி பாலம்; ஈரோடு மாவட்டம், பழையபாளையத்தில் 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கதிரம்பட்டியில் 1 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் பழுதடைந்த தரைபாலங்களுக்கு பதிலாக கட்டப்பட்டுள்ள பாலங்கள்; சிவகங்கை மாவட்டம், மருதிப்பட்டியில் 3 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடியில் 21 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம் 104 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 புதிய பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.1.2013 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உப்புதுறைப்பாளையம் முதல் மதுக்கம்பாளையம் பிரிவு வரை அமைக்கப்பட்டுள்ள தாராபுரம் புறவழிச்சாலையையும்;

சேலம் மாவட்டம் எடப்பாடியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; தருமபுரியில் 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; விழுப்புரம் மாவட்டம் விழுப்புரத்தில் 29 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள பயணியர் மாளிகைகள் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டியில் 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகம்; திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள

கோட்ட அலுவலகக் கட்டடம், என மொத்தம் **1** கோடியே **97** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **6** கட்டடங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **30.1.2013** அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 31.1.2013